### நதிகள் இணைப்பின் முன்னோடி

# காலிங்கராயன் வரலாற்றை பாடப்புத்தகங்களில் இடம் பெறச்செய்ய வேண்டும்

## கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு கோரிக்கை



ஈரோடு, மே.13–

நதிகள் இணைப்பின் முன்னோடியாக விளங்கிய காலிங்கராயன் வரலாற்றை பாடப்புத்தகங்களில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு கோரிக்கை விடுத்து உள்ளார்.

### காலிங்கராயன்

ஈரோடு கொங்கு ஆய்வு மையத்தின் தலைவரும் கல்வெட்டு அறிஞருமான புலவர் செ.ராசு வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

ஈரோடு மாவட்டம் வெள்ளோடு கனகபுரம் பகுதியில் நஞ்சையன் என்பவருக்கு மகனாக பிறந்தவர் லிங்கையன். பாண்டியர் படையில் சேர்ந்து தனது ஆற்றலால் படைத்தளபதியாக இருந்தார். வீரபாண்டியன் அரசவையில் அமைச்சராக இருந்தார். அவருக்கு காலிங்கராயன் என்ற பட்டப்பெயரை பாண்டியன் வழங்கினார். அந்த பெயர் அவருக்கு நிலைத்தது. காலிங்கராயனை கொங்கு மண்டலத்தின் நிர்வாகியாக பாண்டியன் நியமித்தார்.

### வாய்க்கால் வெட்டினார்

அவருடைய நிர்வாகத்தின் கீழ் கொங்கு மண்ணின் பல பகுதிகள் வளர்ச்சி அடைந்தன. தனது ஆளுகைக்கு உள்பட்ட பகுதியில் புதுக்குளங்கள் வெட்டினார். பழைய குளங்களை செப்பனிட்டு தண்ணீர் நிரப்பினார். இதனால் பாசனம் செழித்தது. காடுகளை அழித்து மக்களை குடியேற்றி புது ஊர்களை உருவாக்கினார். கோவில்களுக்கு திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகங்கள் நடத்தினார். கோவில்களுக்கு வழங்கும் நெல் தூய்மையாக இருக்க செய்தார். உரிமையற்ற மக்களாக கருதப்பட்ட மக்கள் செருப்பு அணியவும், வீட்டுக்கு காரை பூசவும், விழாக்களின் போது வாத்தியம் வாசிக்கவும் உரிமைகள் வழங்கினார்.

இவ்வாறு பலதிட்டங்களை செய்த காலிங்கராயன் நிறைவேற்றிய வரலாற்றை கடந்து நிற்கும் திட்டம் காலிங்கராயன் அணைக்கட்டு மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் திட்டமாகும்.

### நதிகள் இணைப்பு

பவானி ஆறு, காவிரியில் கலக்கும் இடத்தின் அருகே தடுப்பணை கட்டி 56½ மைல் தூரம் வாய்க்கால் வெட்டி சாமை விளையும் இடமெல்லாம் சம்பா நெல் விளையச் செய்தார். பவானி ஆற்றின் தண்ணீரை வாய்க்கால் மூலம் கொண்டு சென்று பாசனத்துக்கு பயன்படுத்தியதுடன், கொடுமுடி ஆவுடையார் பாறை பகுதியில் நொய்யல் ஆற்றில் கலக்கச்செய்தார். தொடர்ந்து அமராவதி நதி வரை வாய்க்காலை இணைக்கவும் திட்டமிட்டார். இவ்வாறு பவானி, நொய்யல், அமராவதி ஆறுகளை இணைக்க பாடுபட்ட காலிங்கராயன் நதிகள் இணைப்பின் முன்னோடியாக இருக்கிறார்.

இவர் வெட்டிய அணை மற்றும் வாய்க்கால் கி.பி.1282–ம் ஆண்டு தை மாதம் 5–ம் நாள் பாசனத்துக்காக திறக்கப்பட்டது. 1270–ல் தொடங்கி 12 ஆண்டுகள் இந்த பணிகள் நடந்தன. இப்படி ஒரு தவம் போல வாய்க்கால் வெட்டிய காலிங்கராயன் அணை மற்றும் வாய்க்கால் பயனை அவரது வம்சா வழியினர் யாரும் பயன்படுத்தக்கூடாது என்று ஆணையிட்டு நாட்டுக்கு அர்ப்பணித்தார். பின்னர் தனது குடும்பத்தினருடன் பொள்ளாச்சி அருகில் உள்ள ஊத்துக்குளியில் குடியேறினார். தற்போது அவருடைய 37–வது தலைமுறையினர் அங்கு வாழ்ந்து வருகிறார்கள்.

### மணிமண்டபம்

மக்களுக்காக நல்லாட்சி புரிந்ததுடன், வாய்க்காலை உருவாக்கி பாசனம் அளித்த காலிங்கராயனுக்கு உருவச் சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று முன்னாள் முதல்–அமைச்சர் ஜெயலலிதா, அரசு சார்பில் மணிமண்டபம் மற்றும் சிலை அமைக்க உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து பணிகள் நிறைவடைந்து சிலை மற்றும் மணிமண்டபம் திறப்பு விழா நடைபெறுகிறது. தமிழக முதல்–அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்ற உள்ளார்.

மேலும் காலிங்கராயன் நினைவை போற்றும் வகையில் ஆண்டுதோறும் தை மாதம் 5–ந் தேதி காலிங்கராயன் விழா அரசு விழாவாக கொண்டாடப்பட வேண்டும்.

### பாடப்புத்தகங்களில்...

மத்திய அரசின் மூலம் காலிங்கராயன் தபால்தலை வெளியிட செய்ய வேண்டும். பவானி ஆற்றில் தீவு போன்று உள்ள அணைத்தோப்பு பகுதி, காலிங்கராயன் பாளையம் அணைக்கட்டினை சுற்றுலா தலமாக அறிவிக்க வேண்டும். வெள்ளோடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கூடத்துக்கு காலிங்கராயன் பெயர் சூட்டப்பட வேண்டும். காலிங்கராயன் வரலாற்றை பாடப்புத்தகங்களில் இடம்பெறச் செய்ய வேண்டும். ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள காலிங்கராயன் இல்லத்தில் அவரது உருவச்சிலை அமைக்க வேண்டும்.

இந்த கோரிக்கையை மத்திய–மாநில அரசுகள் நிறைவேற்றவும், காலிங்கராயன் வாய்க்கால் திறப்பு அன்று வாய்க்கால் கரைப்பகுதி எங்கும் பொதுமக்கள் பொங்கல் வைத்து பூச்சொரிந்து காலிங்கராயன் விழா கொண்டாடவும் முன்வரவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு கூறி உள்ளார்.